# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

**Saturday, the 25th February 1961.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAO) in the Chair.

### I.—QUESTIONS AND ANSWERS.

### STARRED QUESTIONS.

*Price Policy*

* 470 *Q.*—SRI S. M. ANNAMALAI: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) செப்டம்பர் மாதத்தில் கூடிய விலைக் கொள்கை கமிட்டி **(Price Policy Committee)** யினுடைய அறிக்கை கிடைத்ததா ?

(இ) அப்படியாயின் அதிலுள்ள முக்கிய சிபாரிசுகள் யாவை ?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) and (*b*) The Price Policy Committee does not seem to have as yet completed its deliberations. No report as such has been received.

**SRI S. M. ANNAMALAI:** நேற்று ஒரு கேள்விக்கு மேஜை மீது வைக்கப்பட்ட அறிக்கையிலேகூட, இந்த விலைக்கொள்கை கமிட்டி அத்தியாவசியமான உணவுப் பண்டங்களின் விலையைக் கட்டுப்படுத்தவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறதே. அதைக் குறித்து கேள்வி கேட்ட நேரத்தில் அந்தந்த சமயத்தில் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது என்று கனம் அமைச்சர் சொன்னார். என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன ?

**THE HON. SRI C. SUBRAMANIAM:** அதற்காகத்தான் நியாய விலைக் கடைகள் ஏற்படுத்தியிருக்கிறோம். வேண்டிய அளவு கோதுமை அமெரிக்காவிலிருந்து தருவிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய விளைச்சலையும் அதிகப்படுத்துவதற்கு முயற்சி எடுத்து வருகிறோம். அவசியம் ஏற்பட்டால் மேலும் என்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்பதைப் பற்றி ஆராயப்படும்.

SRI A. A. RASHEED: Since the Committee has met in September 1960, what is the reason for not submitting its report till now?

THE HON. SRI C. SUBRAMANIAM: I do not think I can explain the action of the Price Policy Committee here. That is a committee constituted at the Central level.